# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

விலை சதம் 10


> சர்வோதயத்துக்கு நாடு, காடு என்ற எல்லை என்ன? உலகத்துக்கே சர்வோதயம். உலகம் உய்வதே சர்வோதயம்.
>
> — விநோபா


மலர் 12 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 105) 1975 யூன் | இதழ்—9


# “விநோபா அடிகளைச் சந்தித்தேன்”

## பூஜ்ய கைத்தான்ஜி கூறுகிறார்

[ விநோபா அடிகள் மௌன விரதத்தை மேற்கொள்ளுகிற வேளை அவரைத் தரிசித்து வந்த தமிழ் நாட்டின் தீனபந்து கைத்தான்ஜி தமது அனுபவத்தை உள்ளம் உருகிக் கூறுகிறார். இவர் 1971 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்து சர்வோதய பணிகளிலீடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. ]



விநோபா அடிகளைத் தரிசிக்க வேண்டுமென்று நான் கடந்த பலமாதங்களாக ஆவலோடு காத்திருந்தேன். அடிகளைச் சந்தித்து சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாயிற்று. அவர் மௌனவிரதம் மேற்கொள்ளப் போகிறார் என்ற செய்தி கேட்டதும் மௌனமானார் ஆசிரமத்திற்கு விரைந்தேன். அன்று கிறிஸ்துமஸ்நாள். இதற்குமுன்னர் கடிதத்தின்மூலம் அவரிடம் பல கேள்விகளை எழுப்பியிருக்கிறேன். அன்றும் அக்கேள்விகளை ,அவர் முன் சமர்ப்பித்தேன். அவற்றுக்கு அவர் நேரடியாகப் பதிலளிக்கவில்லை. ‘பதில் கூறுவதற்கும் ஒரு எல்லை உண்டு. சிலவற்றுக்கு பதில் கூறுவதற்கு சொற்கள் பயனற்றுப் போகின்றன. அதற்குரிய பதில் மௌனம் தான்’ என்று அடிகள் அடக்கமாகக் கூறினார். அதை நானும் புரிந்து கொண்டேன். தாம் சற்று நேரத்தில் ஏற்கவிருக்கும் மௌன விரதத்துக்கு அப்பொழுது அவர் தயாராகிக் கொண்டிருக்கிறார் என்பதை நான் உணர்ந்தேன். அந்த சமயத்தில் வெளியிலிருந்து வந்திருந்த சுமார் நூறு பேர்கள் மற்றும் ஆசிரமவாசிகள் ஆகியோர் பக்தி விநயத்தோடு அவர் முன் காத்திருந்தோம்.

இந்த பூமிதான மகரிஷியின் முகத்தை நான் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். இடையிடையே அவர் பேசியதை கூர்ந்து கேட்டேன். பைபிளில் கூறப்பட்டுள்ள ஒரு நிகழ்ச்சியை அவர் அன்று விவரித்தார். அது கிறிஸ்துநாதரின் சிஷ்யர்களில் ஒருவரான பேதுருவின் கதை. ஒரு சமயம் பேதுரு தம் குருநாதர் கிறிஸ்துவிடம் ஒரு கேள்வி கேட்டான். ‘குருவே ஒரு மனிதனை எத்தனை முறை நான் மன்னிக்க வேண்டும்? வேதத்தில் கூறியுள்ளபடி அவனை ஏழு முறை மன்னித்தால் போதுமா?’ என்பது அவனுடைய கேள்வி. ‘போதாது, ஏழு முறை போதாது, எழுபது முறை மன்னிக்க வேண்டும்’ என்றார் ஏசுநாதர்.

மன்னிக்கும் இதயத்தை இழக்கும் போது பிளவு தான் மிஞ்சுகிறது. சர்வோதயக் குடும்பத்தை பிளவுபடுத்தி விடாதீர்கள் என்று திரும்பத் திரும்ப கூறினார் விநோபா அடிகள். அன்றுஅவர் பேசியதின் கடைசிப்பேச்சு இது. அவர் பேசியதின் பொருள் விரைவில் நமக்கு விளங்கும் என்று நான் நம்புகிறேன்.

அன்று கிறிஸ்துமஸ் நாள் மாத்திரமல்ல. அன்று கீதை ஜயந்தி நாளும் கூட. மிகப் பொருத்தமான புனித நாள். கீதை ஜயந்தியில் அவர் கலந்து கொண்ட பின்னர் மௌன விரதத்தை ஏற்கும் சூக்கும தவத்தில் பிரவேசித்தார். அந்த வேளையில் அவர் திருமுன்னர் இருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

தொடர்ந்து ஆசிரமத்தில் இரண்டு நாட்கள் தங்கினேன். நான் ஊர் திரும்புகிற வேளையில் பஜாஜி என்னைப் பார்க்க வந்தார். பிகார் இயக்கத்தைக் குறித்து அப்பொழுது பேச்சு வந்தது. ஏன் இந்தப் பிகார் இயக்கம் என்ற கேள்வியும் எழுந்தது. நான் கிறிஸ்தவ நண்பர்கள் மத்தியில் கூறுவதுண்டு, ‘கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டி தொடங்குகிறது’ என்பேன். சர்வோதய நண்பர்கள் மத்தியில் இதைக் கூறுவதாயின் ‘சத்திய தரிசனத்தில் புதிய சிருஷ்டி தோன்றுகின்றது’ என்பேன். சத்தியத்தைத் தவிர இவ்வுலகில் நமக்கு வேறு புகலேது? நாம் மேற்கொள்ளும் காரியத்தில் சத்தியம் இல்லையானால் நமது அடிப்படையே தகர்ந்து போகும். கடவுளுடைய சிருஷ்டிக்கு அவர் கையாளும் ஆயுதம் சத்தியம். அந்த ஆயுதம் பரிசுத்தமானதாக இல்லாமற் போனால் சிருஷ்டியும் அலங்கோலமாகி விடும். நமது வழிமுறை சுத்தமானதாக இருக்க வேண்டும். ஏனெனில் நாம் சத்திய சோதனையை மேற்கொண்டிருக்கிறோம்.

இந்தியாவில் மாத்திரமல்ல, உலகெங்கிலும் சத்தியத்தின் ஒரு அம்சமான நாணயத்தின் தேவை என்பதை உணருகிற தருணம் இது. பிகார் இயக்கத்திலும் இது தான் நோக்கமாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். எங்கே நாம் பரிசுத்தப்படுத்தும் பணி


(4 ஆம் பக்கம் பார்க்க)

# காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]
தொலை பேசி; 254
(கிளிநொச்சி)
காந்தி ஆண்டு 105
1975 யூன்


## அகிம்சை இன்பம்

உலகத்தின் வளர்ச்சி எதில் தங்கி உள்ளது? உலகம் வளர்ந்து வரும் முறையை நாம் கூர்ந்து பார்த்தோமானால் ஆத்மனோடு சேர்ந்த உடம்பு சடப்பொருள்களை நுகர்வதிலேயே தங்கியுள்ளது போல் தோன்றும். உணவு உணவு என்று ஒரு நிலையிலிருந்து கத்துவோர் ஒரு புறம். பல் சுவை உணவு தேடி விதம் விதமான இடங்களுக்குச் செல்வார் மறு புறம். பின்னர் குடிசை கூட இல்லையே என்று தவிப்பார் ஒரு புறம். தம் பளிங்கு மாளிகையை நாளும் மினுக்குவார் மறுபுறம். நடை தள்ளாடி வேலைக்குச் செல்வார் ஒரு புறம். பறக்கும் கார்களில் உறங்கியபடி உலாவுவார் மறுபுறம். இவ்வாறு உலகம் இயங்குகிறது. கீழ் நிலையில் உள்ளார் மேல்நிலை என்று சொல்லப் படுவதை நினைத்து ஏங்குவார். எங்கு பார்த்தாலும் இந்த உடலுக்கு வேண்டியதை மனிதன் தேடுகிறான். தேடிக் கொண்டிருக்கிறான்.

எல்லோரும் பல் சுவையோடு உண்டு மாளிகையில் வாழ்ந்து காரில் பறக்க முடியுமா? அல்லது அயலவன் உறக்கமின்றிப் பட்டினியால் வாட, மற்றவனோ உறங்கும் மாளிகையிலிருந்து புறப்பட்டு பறக்கும் மாளிகையில் உலாவி வரலாமா? இவனின் உடல் வளர்ந்ததன்றி உயிர் வளரவில்லையே. உடல் வளர்ச்சி சட வளர்ச்சியே. சட வளர்ச்சி என்பது பொருளாதாரப்பெருக்கமே - பொருளாதார வளர்ச்சி என்பது என்ன? இந்த மண் தரக்கூடிய பலன்கள் எல்லாவற்றையும் மிகக் கூடிய அளவில் நுகர்தலே.

முதலாளி வர்க்கம் தம் நலம் கருதி போகம் விழையும் தம் ஆசைப் பெருக்கத்தால் பலவீனமானவர்களை, பொருள் தேடுவதில் சற்றுப் பிந்தியவர்களை, ஏமாற்றிப் பிழைக்கிறார்கள், சற்றுப் பின்தங்கியவர்களும், பின்தங்கிய நாடுகளும் போக பூமியைப் பார்த்துத் தாமும் பொருளை வளர்த்து, சடத்தையே நுகர்ந்து முன்னேறலாம் என்று கருதுகிறார்கள். இருவரும் இந்த மண் வாழ்வின் இயல்பை அறியாதவர்களே.

போட்டி போட்டுக் கூடிய மண் வளத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் மண்தரும் பயனுள் பெரும்பகுதியை தனி ஒருவரோ ஒரு நாடோ தம் வயப் படுத்திக் கொள்ளவேண்டும். அப்படியென்றால தான் நுகர்வினைப் பெருக்கலாம். இந்த நுகர்வின் மோகத்தால், மூலவளங்கள், கனிப்பொருள்கள் பெறப் போட்டி; கைத்தொழில் நுட்பத்தை இன்னும் அதி நுட்பமாக்கப் போட்டி; தாம் கட்டி எழுப்பிய செல்வக் கோட்டையைக் காப்பாற்றுவதில் போட்டி? இப்படியே போட்டி வளரும்.

இதில் உள்ள ஆச்சரியம் என்னவென்றால் சோசலிசம் என்னும் புது அறத்தை நிலை நாட்ட முயலும் நாடுகளுமே இந்த மண் வளத்தை நுகர்வதில் போட்டி போடுகின்றன. முதலாளித்துவமும் சரி சோசலிசமும் சரி ஒன்றை ஒன்று எதிர் நோக்கி நிற்கின்றனவே அன்றி உலக நோக்கில் ஈடுபடவில்லை. யார் தான் சோசலிசத்திற்கு சமதர்மம் என்று சொன்னார்களோ நாம் அறியோம். ஆனால் சோசலிசத்தை விட சமதர்மம் என்னும் சொல் நல்லது போல் தோன்றுகிறது. பொருள் உடைமை உற்பத்திச்சாதனங்கள் எல்லாம் சமூகத்தின் பொதுவுடைமையாகி விட்டால் போதாது. எல்லோரும் ஒத்த முறையில் நுகர வேண்டும். எல்லோரும் இயன்றளவு தம் கடைமையில் ஈடுபடவேண்டும். அப்பொழுது தான் சமதர்மம் உண்டாகும்.

இந்தத் தர்மத்தை மறந்து நுகர்வு மோகத்தால் எல்லா வகை அரசுகளுக்கும், சமூகவுடைமை அரசுகள், முதலாளித்துவ அரசுகள் ஆகியவற்றிற்கிடையில் போட்டியும் அதனால் போரும் ஏற்படுகின்றன. இந்தப் போரின் தீமையை, போருக்காக ஆயத்தம் செய்வதன் தீமையை ஒருவரும் சிந்திப்பதில்லை. இந்த மண்ணாசையால் எழுந்த போட்டியின் நிமித்தமாக போராயத்தங்கள் மிகப் பெருகி வருகின்றன.

உலக நாடுகள் படைக்கலங்களுக்காக ஆண்டுதோறும் 2000 கோடி டொலர்கள் செலவழிக்கின்றன. உலகத்திலுள்ள விஞ்ஞானிகள் எந்திரிகளுள் அரைவாசியினர் படைக்கலம் படைப்பதிலும் பழுது பார்ப்பதிலுமே பணி செய்கின்றனர். உலகத்துச் சிறந்த விஞ்ஞான அறிவு எதற்காகச் செலவழிக்சப்படுகிறது. போருக்காக. போர் எதற்காக? தனிப்பட்டோர் போக மேம்பாட்டிற்காக.

இதனால் என்ன நேரும். படைக்கலங்கள் செய்ய வேண்டும். அவற்றை உற்பத்தி செய்ய மண் வளங்கள் குறையும். வறுமை நேரும். பட்டினிச்சாவு நேரும். மண் வளத்தைப் பங்கிடுவதில் போட்டி வந்து போர் வந்து மக்கள் மாண்டு மடிவர். இந்த விபரீதமான நுகர்வுச் சுற்றினை நாம் நோக்கினால் என்ன புலப்படுகின்றது. வன்முறையால், ஏமாற்றிப் போட்டியிட்டு உறையுள், உடை, ஊர்தி என்பவற்றைப் படைத்துப் போட்டியிட்டு அனுபவிக்கிறார்கள். பின் இந்த நிலையைப் பேணப் போரிடுகிறார்கள். இம்சையான நுகர்வு முறை இம்சையான போரில் முடிவதை நாம் காண்கிறோம்.

போர் முறை எப்படி வளர்ந்திருக்கிறது. நினைக்கவும் முடியாது. போர்க்களத்தில் உள்ள போர்வீரரை கொம்யூட்டர் மூலம் எங்குளார் என்று கணித்து அறிந்து லேசர் ஒளி மூலம் குண்டுகள் பாய்ச்சி கணத்தில் அழித்து விடுவார்சள். பகைவன் எங்கிருந்தாலும் மோப்பம் பிடித்து பகைவனிலுள்ள ஒளி, வெப்ப சக்திகளைத் தொடர்ந்து சென்று கலைத்து அழிக்கும் உணர் கலங்கள் பல நூறு வகையின கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. இப்படிப் படை நுட்பமும் கொடுமையும் வளர்ந்து வருகின்றன.

இந்தப் பகைமைக்கு மூலகாரணம் மித மிஞ்சிய நுகர்வு. எதிர் காலத்தில் தன் உடலிற்கு மிக இன்றியமையாத சடப்பொருள் நுகர்வோடு மனிதன் அமைவுற வேண்டும். நுகர்வினால் அவன் இன்பம் பெற வேண்டுமாயின், கலைகள், காவியங்கள், களியாட்டங்கள், முதலிய மண்வளத்தை வேண்டி நிற்கா முறையிலமர்ந்த நுகர்வுப் பொருள்களை நாட வேண்டும்.

இந்த மண்ணுலகு இனி இந்த மானிட உடம்பின் பெருக்கத்தைத் தாங்காது. உடலிற்கு இனியவற்றை ஊட்டுவதற்கு ஆற்றல் போதாது. இனி சிந்தனைக்கும் ஆத்மாவிற்கும் இன்பம் ஊட்டும் பொருள்களை நாம் புதிது படைக்க வேண்டும். இப்போது உள்ளவற்றைத் திருப்பி அமைக்க வேண்டும். சிந்தனை நுகர்வின்பம் பங்கிட்டு முறையால் அழியாதது. ஆத்ம இன்பம் பலர் சேர்ந்து நுகர்ந்தாலும் மூலதனம் வற்றாதது. அகிம்சை முறையில் எல்லோருடனும் சேர்ந்து இன்பமுற வழிகாட்டுவன சிந்தனை இன்பமும் ஆத்ம இன்பமுமேயாம்.

— இ. இ.

# காந்தி ஜயந்தி விழா பேச்சுப்போட்டி

1975 அக்டோபர் 2 ஆம் திகதி காந்தி ஜயந்தி விழாவை முன்னிட்டு அகில இலங்கைக் காந்தி சேவா சங்க கொழும்புக் கிளையும், மகாத்மா காந்தி (TRUST) ஒம்படையும் சேர்ந்து ஒரு பேச்சுப் போட்டியை நடத்தும்.

1. இப் போட்டியிற் கொழும்புப் பிராந்தியப் பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றலாம்.
2. இப் போட்டி கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இருபிரிவுகளாக நடைபெறும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்குப் பரிசு வழங்கப்படும்.
3. கீழ்ப் பிரிவிற் பங்கு பற்றும் மாணவர்கள், 1975 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் திகதியில் 12 வயதுக்கு மேற்படாதவர்களாய் இருத்தல் வேண்டும்.
4. மேற்பிரிவிற் பங்கு பற்றும் மாணவர்கள், 1975 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் திகதியில் 16 வயதுக்கு மேற்படாதவர்களாய் இருத்தல் வேண்டும்.
5. கீழ்ப்பிரிவினர் பின்வரும் விடயங்களில் ஒன்றைப் பற்றிப் பேசலாம்.
   1. காந்தியடிகளின் இளமைக்காலம்.
   2. தென்னாபிரிக்காவிற் காந்தியடிகள்.
   3. சிரமதானம்.
   4. அகிம்சை.
   5. காந்தியடிகளும் தெய்வ நம்பிக்கையும்
6. மேற்பிரிவினர் பின்வரும் விடயங்களில் ஒன்றைப் பற்றிப் பேசலாம்.
   1. காந்தியடிகளும் தீண்டாமையும்.
   2. காந்தியடிகள் காட்டிய பொதுவுடமைத்தத்துவம்.
   3. காந்தி ஒரு மகாத்மாவா?
   4. வாழ்க்கையும் சமயமும் அரசியலும் வேறு வேறானவையல்ல-
   5. காந்தியடிகளின் பொருளாதாரக் கொள்கை.
7. கீழ்ப்பிரிவினர் 5 நிமிடங்களுக்கு மேற்படாமலும் மேற்பிரிவினர் 10 நிமிடங்களுக்கு மேற்படாமலும் பேசுதல் வேண்டும்.
8. போட்டியிற் பங்கு பெற விரும்பும் மாணவர்கள், கௌரவ காரியதரிசி, காந்தி சேவா சங்கம் (கொழும்புக் கிளை) ½, 47 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 6 என்ற முகவரிக்கு, தங்கள் பாடசாலை அதிபருக்கூடாக, 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும். எக் காரணங்கள் கொண்டும் அதன் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
9. போட்டி, 1975 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.
10. போட்டியில் வெற்றி பெற்றோருக்கு, 1975 ஒக்டோபர் 2 இல் நிகழும் காந்தி ஜயந்தி தின விழாவின் போது பரிசுகள் வழங்கப்படும்.

சோ. க. தம்பிப்பிள்ளை,
காரியதரிசி,
காந்தி சேவா சங்கம் (கொழும்புக் கிளை)

# அன்னை கஸ்தூரிபாய் காந்தி நிலையம்

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் 11 ஆம் கட்டையிலுள்ள தர்மபுரத்தில் அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் அன்னை கஸ்தூரிபாய் காந்தி இல்லத்தை நிறுவியுள்ளது.

இந்த இல்லத்தின் அத்தியாவசிய தேவையான நீரைப் பெறுவதற்கான கிணற்றை அமைக்கும் பணியை சிவநெறிப் புரவலர். திரு. க. கனகராசா தம்பதிகள் சென்ற 26. 05. 57 திங்கட்கிழமை ஆரம்பித்து வைத்தனர்; கிணற்றைக்கட்டி முடிக்கும் முழுப் பொறுப்பையும் திரு. கனகராசா தம்பதிகள் பொறுப்பேற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

கஸ்தூரிபாய் காந்தி இல்லத்தை நிர்வகிக்க பின்வருபவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

**தலைவி, கௌரவ நிர்வாகி**
செல்வி. க. சரவணமுத்து; பீ. எஸ். ஸி
(ஓய்வு பெற்ற அதிபர்)
380, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

**உப தலைவி:**
திருமதி. வ. இராமலிங்கம்; பி. ஏ.
'' திருப்பதி ''
கல்லூரி வீதி, காங்கேசன் துறை.

**செயலாளர்:**
திருமதி. க. புஷ்பராணி, ஆசிரியை,
ஆஸ்பத்திரிச் சந்தி, சங்கானை,

**துணைச் செயலாளர்:**
திரு. பொ. சண்முகராசா,
40, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

**பொருளாளர்:**
திரு. ப. கதிரவேலு, சட்டத்தரணி,
62, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

**உறுப்பினர்கள்:**
திருமதி. இரத்னு நவரத்தினம்
திருமதி. R. ஆனந்த குமாரசாமி
சிவநெறிப்புரவலர்
திரு. க. கனகராசா
திருமதி. நா. கனகராசா
திரு. இ. கந்தையா
திரு. சி. க. வேலாயுதபிள்ளை
செல்வி. S. விசாலாட்சி
திருமதி. P. தர்மலிங்கம்
திரு. S. வித்வரத்னம்
செல்வி. இ. சிவமலர்

## அன்பர் தபால்

# சர்வமதஞானமும் சர்வோதயமும் சத்தியசபையும் தியானப்பயிற்சியும்

தங்கள் 'காந்தீயம்' பத்திரிகையில் குறிப்பிட்டது போல் சர்வோதய மகா நாட்டை வருடம் இருமுறையாவது கூட்ட வேண்டும்.

அன்று 'மைற்' மண்டபத்தில் நடந்த மகா நாட்டில் நாம் 'அரசியல் கலப்பற்றதாக தற்போதைக்கு சர்வோதயத்தை இயக்கி வரவேண்டும்' என்று தீர்மானம் எடுத்துக்கொண்டாலும் அத் தீர்மானம் பற்றி நமக்குள் சிலவற்றைக் கதைத்துக் கொள்ளலாம் என்றே இதை எழுதுகிறேன்.

தற்போதைக்கு எமக்கு அரசியல் ஈடுபாட்டுக்குரிய 'சத்தியவலு' இன்மையால் அத்தகைய முயற்சிகளை தள்ளி வைப்பது நல்லதே என்ற பலரின் எண்ணத்துக்கு நாம் விட்டுக் கொடுத்தாலும் அது பற்றிய சில கருத்துக்களை இங்கு நாம் சொல்ல வேண்டும்.

அரசியலில் நேரடி ஈடுபாடு வேறு; அரசியல் கொள்கைகள் பற்றி அறிந்திருப்பது வேறு. அதாவது எந்த அரசாங்கமாவது கொண்டு வரும் சட்ட ஆக்கங்கள் பற்றிய நன்மை தீமைகளை நாம் ஆராய்ந்து நாம் மக்கள் முன் வைப்பது போன்றவை. உலக நாடுகள் எடுக்கும் நடவடிக்கைகள், நடை முறைப்படுத்தும் சட்டங்கள் ஈறுக உள்நாட்டில் இடம் பெறும் மாற்றங்கள் எல்லாம் எவ்வளவு தூரம் சரித்திரத்தை தர்ம வழியில் இட்டுச் செல்ல உதவுகிறது; அதற்கெதிராக நிற்கிறது என்பதை ஆராய்வது, அதற்கேற்ப எப்படி தனிப்பட்ட ஒவ்வொருவரும் தம்மை ஆற்றுப் படுத்துவது போன்றவற்றை நாம் அலசுதல்.

மாநாடு கூட்டப்படும் போது இவற்றையும் ஆராய்ந்து நாம் சமூகத்தின் மனச்சாட்சியாக, எல்லா நாட்டுக்குமுரிய ஓர் சத்தியசபையாக இயங்குகின்ற ஓர் உயரிய ஸ்தானத்தை எடுக்க வேண்டும். செனேற் (மேல் சபை) இல்லாத இந் நாட்டில் நாம் ஒரு சத்திய சபையாக இயங்கலாம். நாம் எடுக்கும் தீர்மானங்கள் தர்ம ஒட்டத்தை விரைவு படுத்தக் கூடிய, எல்லாச் சமுகங்களையும் வளர்க்கக் கூடிய தீர்க்கதரிசனமுடையவையாக இருக்க வேண்டும். எமது தீர்மானம் மக்களிடையே அடிபட வேண்டும்.

நமது தத்துவத்தை சர்வோதயப் பணியில் ஈடுபட்டுள்ள சிறியோர் முதல் பெரியோர் வரை ஆழமாக அறிவதற்குரிய ஆய்வுகள் நடத்துதல், எல்லாப் பிரச்சினைகளுக்கும் எக்காலத்துக்கும் உரிய பரந்து பட்ட இதன் தன்மையை நாம் போதித்தல், வகுப்புகள் நடாத்துதல் வேண்டும்.

சர்வோதய வாதிகள் அனைவருக்கும் சர்வமத ஐக்கியம் பற்றிய அறிவிருக்க வேண்டும். எல்லா மதங்களின் காரண கர்த்தா ஒருவனே என்ற உண்மை போதிக்கப்பட வேண்டும். சர்வ மத ஐக்கியம் பற்றிய அறிவு ஒவ்வொருவரது தனிப்பட்ட மனத்தடைகளையும் வெறிகளையும் நீக்குவதற்கு மிக அவசியம். அகத்தைத் திருத்தும் சர்வ மதஞானத்திலிருந்தே சமூகத்தைத் திருத்தும் சர்வோதயம் எழ முடியும். சர்வமத ஞானமும் சர்வோதயமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள்.

இவற்றைத் தீவிரமாகச் செயற்படுத்த சர்வோதய வாதி ஒவ்வொருவரும் தியானப் பயிற்சியில் ஈடுபட வேண்டும். இன்றைய கொம்யூனிச வாதிகளின் கொரில்லா பயிற்சி போல ஆத்மிக வாதிகளான நாம் தியானப் பயிற்சில் ஈடுபட வேண்டும். எல்லாவித லோகாயுத வாதிகளின் ஆயுதங்களை எல்லாம் புறங்காணக்கூடிய ஒரே ஆயுதம் இதுவே.

இத்தகைய எமது சிந்தனைகளை நாம் தங்கள் முன் வைக்கிறோம். அடுத்த மகா நாடு கூட்டும் போது இவை பற்றியும் சிந்தியுங்கள்; அல்லது கூடிச் சிந்திப்போம்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஈடுபடுகிறோமோ அங்கே அதை அசுத்தப்படுத்தும் வேலையும் கூடவே நடை பெறக் கூடும். இது சாத்தானின் கைவேலை. மக்கள் ஜனநாயகப் பணியில் ஈடுபட்டுள்ள நாம் இதில் எச்சரிக்கையாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

என் தமிழ் நாட்டின் ஊழியர்களுக்கும் நான் இதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் பிகாரில் செய்ய வேண்டியதைவிட அதிகம் நம் தமிழ் நாட்டில் செய்யவேண்டியபணிகள் உள்ளன. நம்முடைய பணியில் நாணயம் இருக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாய் இருங்கள். இந்தநாட்டுக்கு வழி காட்ட வேண்டியவர்கள் நாம். நம்முடைய ஆற்றலுக்கிடையே நமது பலவீனமும் காட்சியளிக்கிறதை உதாசீனம் செய்துவிட வேண்டாம். நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற இக் கடினமான பணியை நிறைவேற்ற பல நூறு தீவிர சோதனைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இந்த அன்பான ஆலோசனையைக் கூறுவதோடு இப்போதைக்கு அமைகிறேன்.

— ஆதாரம்: கிராமராஜ்யம்

## வரப்பெற்றோம்

உழவன்

காந்திய, விவசாய பிரசார ஏடு

நாவலர் தோட்டம்,

நெடுங்கேணி.

நாம் மேலே கூறிய (1) சமூகத்தின் சத்திய சபையாக இயங்குவது (மனச்சாட்சி), (2) சர்வோதய தத்துவ அறிவு, (3) சர்வ மத ஐயம் பற்றிய ஞானம். (4) தியானப் பயிற்சி ஆகிய நான்கும் ஒன்றுக்கொன்று இயைபுடையவை. இவற்றையே நாம் புங்குடு தீவில் தற்போது செய்து வருகிறோம்.

எம். பொன்னம்பலம்,
9 ஆம் வட்டாரம்,
புங்குடு தீவு.

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.